
# 29 ஜூன் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்

### ஜூன் 29 2023 தேசிய புள்ளியியல் தினம்




- அன்றாட வாழ்வில் புள்ளியியல் பயன்பாட்டை பிரபலப்படுத்த ஜூன் 29 அன்று தேசிய புள்ளியியல் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் பேராசிரியர் பி சி மஹாலனோபிஸின் பிறந்தநாளை நினைவுகூரும்.
- 2021 தேசிய புள்ளியியல் தினத்தின் **கருப்பொருள்:** "நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs)–2: பசியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பை அடைதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் நிலையான விவசாயத்தை ஊக்குவித்தல்."

### ஜூன் 29 2023 சர்வதேச வெப்ப மண்டல தினம்




பாதுகாப்பு உத்திகள் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்கும் பூமியில் வெப்பமண்டல பகுதிகளை மேம்படுத்துவதற்கும் ஆண்டுதோறும் ஜூன் 29 அன்று சர்வதேச வெப்ப மண்டல தினம் அனுசரிக்கப்படுகிறது

## செய்திகளில் இடம் பெற்றுள்ள நபர்கள்

### ஆவடி விமானப் படை நிலையத்தில் புதிய அதிகாரி பொறுப்பேற்பு



- ஆவடி விமானப்படை நிலையத்தின் ஏர் கமோடரான பிரசாந்த் ஸ்ரீராம் வைத்யா பொறுப்பேற்றுக் கொண்டார்.
- இந்திய விமானப் படையில் நிர்வாகக் கிளை அதிகாரியாக 1992–இல் நியமிக்கப்பட்ட இவர், தொடர்ந்து விமானப் படையின் பல்வேறு முக்கிய பொறுப்புகளில் தலைமை அதிகாரியாகப் பதவி வகித்துள்ளார்.
- இந்த நிலையில், ஆவடியில் உள்ள விமானப்படை நிலையத்தின் ஏர் கமோடராக

SHANMUGAM IAS

பொறுப்பேற்றுக் கொண்ட பிரசாந்த் ஸ்ரீராம் வைத்யாவுக்கு ஏற்கெனவே அந்தப் பொறுப்பு வகித்து வந்த எஸ்.சிவகுமார் வாழ்த்து தெரிவித்தார். பின்னர், பொறுப்பு தொடர்பான கோப்புகளை அவரிடம் முறைப்படி ஒப்படைத்தார்.

## தமிழ்நாட்டின் தலைமைச் செயலாளராக சிவ்தாஸ் மீனா நியமிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகி உள்ளன

**இறையன்பு ஓய்வு**



- தமிழகத்தில் 7.5.2021 அன்று தி.மு.க. அரசு பொறுப்பேற்றது. அன்றைய தினமே தமிழக அரசின் தலைமைச் செயலாளராக இறையன்பு நியமிக்கப்பட்டார்.
- 60 வயதை நிறைவு செய்ததை தொடர்ந்து இந்த மாத இறுதியில் (நாளை) இறையன்பு பணி ஓய்வு பெறுகிறார்.
- அதைத்தொடர்ந்து தலைமைச் செயலாளராக, நகராட்சி நிர்வாகத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
- அவர் தமிழகத்தின் 49-வது தலைமைச் செயலாளராக இருப்பார்.
- ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த அவர் 5.10.1964 அன்று பிறந்தார்.
- பொறியியல் பட்டம் படித்துள்ள அவருக்கு ராஜஸ்தானி, தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகள் தெரியும். சர்வதேச கல்வியின் மூலம் ஜப்பான் மொழியையும் அவர் கற்றுள்ளார்
- ஐ.ஏ.எஸ்.முடித்த பிறகு சிவ்தாஸ் மீனா 21.8.1989 அன்று தமிழக அரசுப் பணியில் சேர்ந்தார். காஞ்சீபுரத்தில் உதவி கலெக்டராக (பயிற்சி) பணியைத் தொடங்கினார்.
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் முதன்மைச் செயலாளர் உள்பட பல முக்கிய பதவிகளை சிவ்தாஸ் மீனா வகித்துள்ளார்.

## சிபிஐ சிறப்பு இயக்குநராக அஜய் பட்நாகர் நியமனம்



- மூத்த ஐபிஎஸ் அதிகாரி அஜய் பட்நாகர் மத்திய புலனாய்வுத் துறையின் சிறப்பு இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளதாக பணியாளர் அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.
- ஜார்கண்ட் கேடரை சேர்ந்த 1989 பேட்ச் ஐபிஎஸ் அதிகாரியான அஜய் பட்நாகர், தற்போது சிபிஐ கூடுதல் இயக்குனராக உள்ளார்.
- அவரை சிபிஐ சிறப்பு இயக்குநராக நியமனம் செய்து மத்தியப் பணியாளர் அமைச்சகம் பிறப்பித்துள்ளது.
- இவர் 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் தேதி வரை அவர் பதவியில் நீடிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

- அதே வேளையில் குஜராத் கேடரின் 1994 பேட்ச் ஐபிஎஸ் அதிகாரியான மனோஜ் சஷிதர், சிபிஐயின் கூடுதல் இயக்குநராக மூன்று ஆண்டு காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## தடகளத்தில் 3 தங்கப் பதக்கங்கள்: 106 வயது மூதாட்டி புதிய சாதனை




- ஹரியாணா மாநிலம் சார்க்கி தாத்ரி மாவட்டத்தில் உள்ள கத்மா கிராமத்தைச் சேர்ந்தவர் ரம்பாய் கடந்த 1917– ல் பிறந்தவர்.
- மான் கவுரை பார்த்து விளையாட்டில் அவருக்கு ஆர்வம் வந்தது. அதன் காரணமாக கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் விளையாட்டு பயிற்சியை தொடங்கினார், கடந்த ஆண்டு 45.40 நொடிகளில் 100 மீட்டர் தூரத்தை கடந்து மான் கவுர் படைத்த சாதனையை தகர்த்தார்.
- இவர் கடந்த ஆண்டு வதோதராவில் நடைபெற்ற தேசிய மாஸ்டர்ஸ் தடகள சாம்பியன் ஷிப்பில் இரண்டு தங்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- 100 மீட்டர் ஸ்பிரிண்ட் 200 மீட்டர் ஸ்பிரிண்ட் மற்றும் குண்டு எறிதலில் தங்கம் வென்று அசத்தியுள்ளார் 106 வயது மூதாட்டியான ராம்பாய். டேராடூனில் யுவ்ராணி விளையாட்டு கமிட்டி சார்பில் நடத்தப்பட்ட 18–வது தேசிய ஓபன் தடகள சாம்பியன் ஷிப்பில் இந்த சாதனையை அவர் படைத்துள்ளார்.

## ஆவடி புதிய காவல் ஆணையராக சங்கர் பொறுப்பேற்பு



- ஆவடி காவல் ஆணையரகத்தின் முதல் ஆணையராக நியமிக்கப்பட்ட சந்தீப் ராய் ரத்தோர், கடந்த மே மாதத்தில் டிஜிபியாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு, தமிழ்நாடு காவல் பயிற்சி அகாடமியின் பயிற்சி பிரிவு டிஜிபியாக நியமிக்கப்பட்டார்.
- இதையடுத்து, கடந்த மே 22–ம் தேதி முதல் ஏடிஜிபி ஏ.அருண், ஆவடி காவல் ஆணையரகத்தின் 2–வது ஆணையராக பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் இவர், தமிழ்நாடு அரசால் சட்டம்– ஒழுங்கு ஏடிஜிபியாக பணி மாற்றம் செய்யப்பட்டார்.
- இதையடுத்து, ஆவடி காவல் ஆணையரகத்தின் 3 –வது ஆணையராக ஏடிஜிபி கி.சங்கர், நேற்று ஆவடி காவல் ஆணையரகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

SHANMUGAM IAS AC

## பெடரல் வங்கியின் பகுதி நேர தலைவராக ஏ பி ஹோட்டாவை நியமிப்பதற்கு ஆர்பிஐ ஒப்புதல் அளித்துள்ளது

- ❖ இந்திய ரிசர்வ் வங்கி (RBI) ஜூன் 29, 2023 முதல் ஜனவரி 14, 2026 வரை ஃபெடரல் வங்கியின் பகுதி நேரத் தலைவராக, ஏ.பி. ஹோட்டா, சுயேச்சை இயக்குனரை நியமிக்க ஒப்புதல் அளித்தது.

**ஏ.பி. ஹோட்டா**

- ❖ ரிசர்வ் வங்கியில் 1982-2009 வரை தொழில்நுட்பம் மற்றும் கட்டண முறைகளில் 27 ஆண்டுகளுக்கும் மேலாக வங்கி அனுபவம் பெற்றவர்.
- ❖ இவர் ஜனவரி 15, 2018 முதல் ஃபெடரல் வங்கி லிமிடெட்டின் சுயாதீன இயக்குநராக நியமிக்கப்பட்டார்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## இந்திய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்கள் பட்டியலில் சென்னை ஐ.ஐ.டி 6–வது இடம் அண்ணா பல்கலைக்கழகம் 10–வது இடத்தை பிடித்தது




- ❖ கியூ.எஸ். நிறுவனம் சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை பட்டியலை வெளியிட்டது.
- ❖ அதில் இந்திய அளவில் சென்னை ஐ.ஐ.டி.க்கு 6–வது இடமும், அண்ணா பல்கலைக்கழகத்துக்கு 10–வது இடமும் கிடைத்துள்ளது.
- ❖ கியூ.எஸ்.நிறுவனம் லண்டனை சேர்ந்த 'கியூ. 'எஸ்.' என்ற நிறுவனம் ஒவ்வொரு ஆண்டும் உலக அளவில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டு வருகிறது.
- ❖ அந்த வகையில் 20–வது பதிப்பாக கியூ.எஸ். உலக பல்கலைக்கழக தரவரிசை பட்டியல் – 2024 அந்த நிறுவனம் நேற்று வெளியிட்டுள்ளது.
- ❖ உலகம் முழுவதும் ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பியா, அமெரிக்கா, ஓசினியா போன்ற மண்டலங்களில் 104 பகுதிகளில் உள்ள 1,500–க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் இதில் பங்கேற்றன.

**அண்ணா பல்கலைக்கழகம்**

- ❖ இதில் இந்திய அளவில் சிறந்த கல்வி நிறுவனங்களாக மொத்தம் 45 நிறுவனங்கள் இடம்பெற்று இருக்கின்றன. அதில் மும்பை ஐ.ஐ.டி. முதலிடத்தை பெற்றுள்ளது.
- ❖ 6–வது இடத்தை சென்னை ஐ.ஐ.டி. பெற்றுள்ளது. இந்த வரிசையில் சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழகம் 10–வது இடத்திலும், சென்னை பல்கலைக்கழகம் 12–வது இடத்திலும் இருக்கிறது.


SHANMUGAM IAS ACADEMY

# உச்சி மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள்

## இ–ஸ்கூட்டர்கள் டிவிஎஸ்– ஸொமாட்டோ ஒப்பந்தம்

- மின்சாரத்தில் இயங்கும் ஸ்கூட்டர்களை விற்பனை செய்வதற்காக பிரபல உணவு விநியோக நிறுவனமான ஸொமாட்டோவுடன் இந்தியாவின் முன்னணி இரு சக்கர வாகன நிறுவனங்களில் ஒன்றான டிவிஎஸ் மோட்டார் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.
- இன்னும் 2 ஆண்டுகளில் ஸொமாட்டோ நிறுவனத்துக்கு 10,000 மின்சார ஸ்கூட்டர்களை விற்பனை செய்வதற்காக அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- சாலை போக்குவரத்தில் காற்றை மாசுபடுத்தாத, புதுப்பிக்கத்த எரிபொருளின் பயன் பாட்டை அதிகரிப்பதற்கான டிவிஎஸ்–ஸின் கொள்கைக்கும், தங்களது விநியோக சேவையில் மின்சாரவாகனங்களை அதிகம் பயன்படுத்த வேண்டும் என்ற ஸொமாட்டோவின் விருப்பத்துக்கும் ஏற்ப இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# புவியியல் குறியீடுகள்

## நாகாலாந்து தக்காளி, வெள்ளரிக்கு புவிசார் குறியீடு



- நாகாலாந்தின் வீட்டுத் தோட்டங்களிலும், பழத்தோட்டங்களிலும் அதிக அளவில் வளர்க்கப்படும் இவ்வகை தக்காளி செடிகளிலிருந்து பெறப்படும் தக்காளி பழம் அளவில் சிறியதாக இருப்பதுடன் நீள்வட்ட வடிவமுடன் மிகுந்த சுவையுடன் இருப்பதால் இவ்வகை தக்காளிக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.



- அதுபோல நாகாலாந்து வெள்ளரிப் பழத்துக்கு அதன் சுவை, மிருது தன்மைக்காக புவிசார் குறி யீடு வழங்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பிராந்திய வேளாண் வணிகக் கழகம் சார்பில் கோஹி மாவில் நடைபெற்ற புவிசார் குறியீடு விழிப்புணர்வு மற்றும் கருத்தரங்கில் 250–க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.
- இவ்வேளாண் வணிக கழகம் மூலம் வடகிழக்கு மாநிலங்களில் ஆங்லாங்க் இஞ்சி, அஸ்ஸாம் லிஜ்ஜி, அருணாசலம் ஆரஞ்சு பழம், கருப்பு அரிசி, மணிப்பூர் எலுமிச்சை பழம், சிக்கிம் பெரிய ஏலக்காய், திரிபுரா அன்னாசிபழம் உள்ளிட்ட வேளாண் பொருள்களுக்கு புவிசார் குறியீடு அளிக்கப்பட்டுள்ளது.
- இதுதொடர்பாக வடகிழக்கு பிராந்திய வேளாண் வணிகக் கழகத்தின் மேலாண் இயக்குநர் ராஜீவ் அசோக் கூறுகையில், 'வடகிழக்குப் பிராந்தியத்தில் 8


SHANMUGAM IAS ACADEMY

மாநிலங்களில் வேளாண் மற்றும் தோட்டக்கலை சார்ந்த 13 பொருள்களுக்கு எங்களது –வேளாண் வணிக கழகம் சார்பில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

- ❖ விவசாயிகள் இந்த புவிசார் குறியீடு இலச்சினைகளை தங்கள் விவசாயப் பொருள்களை விற் பனை செய்ய பயன்படுத்தி அதிக லாபம் ஈட்டலாம் என்றார்.

## கலை மற்றும் கலாச்சாரம்

### மாளிகைமேடு அகழாய்வில் 3 பழங்காலப் பொருள்கள் கண்டெடுப்பு



- ❖ மாளிகைமேட்டில் கண்டெடுக்கப்பட்ட சீனப் பானையோடு, காசு வார்ப்பு, சுடுமண்ணாலான அரசு முத்திரை.
- ❖ அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகேயுள்ள கங்கைகொண்ட சோழபுரம் மாளிகைமேட்டில் நடைபெறும் 3 ஆம் கட்ட அகழாய்வுப்பணியில் சீனப் பானையோடு உள்ளிட்ட 3 பழங்காலபொருள்கள் கிடைத்தன.
- ❖ கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் ராஜேந்திர சோழன் கட்டிய பெருவுடையார் கோயிலின் அருகே உள்ள மாளிகைமேடு பகுதியில்தான் அரண்மனை கட்டப்பட்டதாக வரலாற்றுச் சுவடுகள் தெரிவிக்கின்றன.
- ❖ இதனிடையே மாளிகை மேட்டில் தற்போது 3–ஆம் கட்ட அகழாய்வு பணிகள் நடைபெறுகின்றன. 16 குழிகள் தோண்டப்பட்டு, 21 பணியாளர்களைக்கொண்டு அகழாய்வுப் பணிகள் நடைபெறுகின்றன.
- ❖ இங்கு மாமன்னன் ராஜேந்திரச் சோழன் கால அரண்மனையின் சுவர்கள், சீன வளையல்கள், இரும்பிலான ஆணிகள் உள்பட இதுவரை 461 பழங்காலப் பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.
- ❖ இந்த நிலையில், 11–ஆம் நூற்றாண்டில் தமிழகத்துக்கும் சீன நாட்டுக்கும் இடையிலான வணிகத் தொடர்பை உறுதி செய்யும் வகையில் சீன பானையோடுகள், காசு வார்ப்பு, சுடு மண்ணால் அலங்கரிக்கப்பட்டஅச்சு முத்திரை ஆகிய 3 பொருள்கள் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### சைபர் குற்றவாளிகளைக் கண்டறிய 'சைபர் அலர்ட் செயலி' அறிமுகம்




- ❖ சைபர் குற்றவாளிகளைக் கண்டறியும் வகையில் சென்னை பெருநகர காவல் துறை சார்பில் 'சைபர் அலர்ட் செயலி' (CYBER ALERT APP) அறிமுகம் செய்யப்பட்டது.
- ❖ இந்த செயலியில் சைபர் குற்றவாளிகள் ஏற்கெனவே பயன்படுத்திய கைப்பேசி எண்கள், வங்கிக் கணக்குகள், சமூக ஊடக கணக்குகள்,

SHANMUGAM IAS ACADEMY

மின்னஞ்சல் முகவரிகள், இணையதளங்கள் ஆகியவை பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

- இதனால் குற்றவாளியை விரைந்து கண்டறிந்து கைது செய்யும் வாய்ப்பு போலீஸாருக்கு கிடைக்கும். மேலும் ஒரு இடத்தில் சைபர் குற்றத்தில் ஈடுபடும் நபர், வேறு எந்த சைபர் குற்றங்களில் எங்கெல்லாம் ஈடுபட்டார் என்பதை உடனடியாக அறிய முடியும்.

## நிலவின் தென்துருவத்தை ஆராய்வதற்காக சந்திரயான்–3 விண்கலம் ஜூலை 13–ல் ஏவப்படும்



- இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ), நிலவின் தென்துருவத்தை ஆய்வு செய்வதற்காக சந்திரயான்–2 விண்கலத்தை ஜிஎஸ்எல்வி மார்க்–3 ராக்கெட் மூலம் 2019 ஜூலை 22–ம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் செலுத்தியது. பல்வேறு கட்டப் பயணங்களுக்கு பின்னர் சந்திரயான்–2 2019 செப்டம்பர் மாதம் நிலவின் சுற்றுப் பாதையை சென்றடைந்தது.
- எனினும், தொழில்நுட்பக் கோளாறால் திட்ட மிட்டபடி 'லேண்டர் கலன் தரையிறங்காமல் நிலவில் மோதி செயலிழந்தது. அதேநேரம், விண் கலத்தின் மற்றொரு பகுதியான 'ஆர்பிட்டர்' நிலவின் சுற்றுப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டது. தற்போது ஆர்பிட்டர் நிலவை சுற்றிவந்து, ஆய்வு செய்துவருகிறது.
- இதற்கிடையே, சந்திரயான்–3 திட்டத்தை சுமார் ரூ.615 கோடியில் செயல்படுத்த 2020–ல் இஸ்ரோ முடிவு செய்தது. ஏற்கெனவே ஆர்பிட்டர் நிலவைச் சுற்றி வருவதால் இந்த முறை லேண்டர், ரோவர் கலன்களை மட்டும் அனுப்புவது என முடிவு செய்யப்பட்டது.
- இந்நிலையில், சந்திரயான்–3 விண்கலம் ஜூலை 2–வது வாரம் விண்ணில் ஏவப்படும் என்று இஸ்ரோ அறிவித்திருந்தது. அதன்படி, சந்திரயான்–3 விண்கலம் ஜிஎஸ்எல்வி மார்க்–3 ராக்கெட் மூலம் ஜூலை 13–ம் தேதி மதியம் 2.30 மணிக்கு விண்ணில் ஏவப்பட உள்ளது.

# பொருளாதாரம் & வங்கி

## கோடக் ஜெனரல் இன்சூரன்ஸ் – சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு காப்பீட்டுத் தயாரிப்புகளை வழங்குகின்றன

- கோடக் ஜெனரல் இன்சூரன்ஸ், இந்தியாவில் உள்ள சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (MSMEs) தனிப்பயனாக்கப்பட்ட காப்பீட்டுத் தயாரிப்புகளை வழங்க, செயற்கை நுண்ணறிவால் இயங்கும் தொழில்நுட்ப நிறுவனமான actyv ai உடன் கூட்டு சேர்ந்துள்ளது.

- இது வணிக அபாயங்களை திறம்பட நிர்வகிக்கவும் அவர்களின் சொத்துக்களைப் பாதுகாக்கவும் உதவுகிறது.
- இந்த கூட்டாண்மை நிறுவனங்களுக்கு குழு காப்பீட்டை அவற்றின் விநியோகஸ்தர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் சப்ளையர்களுக்கு நீட்டிக்க அதிகாரம் அளிக்கிறது.

**கோடக் மஹிந்திரா ஜெனரல் இன்சூரன்ஸ் நிறுவனம்**

- நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி – சுரேஷ் அகர்வால்
- நிறுவப்பட்ட ஆண்டு – 1985
- தலைமையகம் – மும்பை

## தமிழ்நாடு செய்திகள்

### பனைமரத்தின் சிறப்பை விளக்கிடும் 'நெட்டே நெட்டே பனைமரமே' காலப்பேழை புத்தகம் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், வேளாண்மை–உழவர் நலத்துறையின் சார்பில் பனையின் சிறப்பினை பொதுமக்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ள "நெட்டே நெட்டே பனைமரமே" என்ற காலப்பேழை புத்தகத்தை நேற்று வெளியிட்டார்.பனை மரம், அனைத்து பாகங்களையும் மானுடத்திற்குக் கொடையாய் அளிக்கும் அற்புதமான மரமாகும்.
- அதன் குருத்தோலை தோரணம் கட்டவும், அழகியல் பொருட்கள் செய்யவும் பயன்படுகிறது. சாரை ஓலை, கூடை முடையவும், பாய் பின்னவும் உதவுகிறது.
- பச்சை மட்டை வேலி அமைக்கவும், நார் எடுக்கவும் உதவுகிறது. பனங்காய் நுங்கும், பனம்பழமும் தருகிறது. பனங்கொட்டை, கிழங்காக மாறி உண்ணப் பயன்படுகிறது.
- பாளை, பதநீர் பெற உபயோகமாகிறது. ஓலை கூரை வேயவும், பதநீர், கஞ்சி போன்றவற்றை ஊற்றிக் குடிக்க உதவும், பட்டை பின்னவும் பயன்படுகிறது.
- உச்சிப்பகுதி, மரத்தொட்டி செய்ய உதவுகிறது. பத்தை மட்டை தும்பு எடுக்கவும், தரை தேய்க்கும் பிரஷ் செய்யவும் பயன்படுகிறது.
- நடு மரம், உத்தரம் செய்ய உதவுகிறது. தூர்ப்பகுதி, வட்ட வடிவிலான பத்தலாக பயன்படுகிறது.
- வேர் மழைக்காலங்களில் நிகழும் மண்ணரிப்பைத் தடுக்க உதவுகிறது.இத்தகைய சிறப்புமிக்கதும் தமிழ்நாட்டின் மாநில மரமான பனையின் முக்கியத்துவம் கருதி, 2021–22ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் முதலாவது வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், பனைமரத்தின் எண்ணிக்கையினை அதிகரிக்கவும், பனை பொருட்களை மதிப்புக் கூட்டுதல் மூலம் பனைத்தொழிலை மேம்படுத்தவும், பனை மேம்பாட்டு இயக்கம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, கடந்த இரண்டு ஆண்டுகளாக இவ்வியக்கம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

SHANMUGAM IAS ACADEMY

## மண்வளத்தை அறிந்து உரமிடும் முறையை ஊக்கப்படுத்த நடவடிக்கை விவசாயிகளுக்கான புதிய இணையதளம் - 'தமிழ் மண்வளம்'



- ❖ வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில், விவசாய பெருமக்கள் தங்கள் நிலத்தில் உள்ள மண்வளத்தினை அறிந்து, அதற்கேற்ப உரமிடுவதை ஊக்குவிப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள **"தமிழ் மண்வளம்"** எனும் புதிய இணைய முகப்பினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில் தொடங்கி வைத்தார்.
- ❖ தமிழ்நாடு சட்டப்பேரவையில், கடந்த 2022–23ம் ஆண்டு வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், 'தமிழ் மண்வளம்' என்ற இணைய முகப்பு உருவாக்கப்படும் என்று வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சரால் அறிவிக்கப்பட்டது.
- ❖ அதன்படி, வேளாண்மை – உழவர் நலத்துறையின் மூலம் உருவாக்கப்பட்ட 'தமிழ் மண்வளம்' எனும் இணைய முகப்பு தமிழ்நாடு முதலமைச்சரால் நேற்றைய தினம் விவசாயிகளின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைக்கப்பட்டது.
- ❖ 'தமிழ் மண்வளம்' இணைய முகப்பின் பயன்கள் விவசாயிகள் கணினி மூலமாகவோ அல்லது கைபேசி மூலமாகவோ http://tnagriculture.in/mannvalam/ எனும் இணையதள முகவரியில் தமிழ்மண் வளம் இணையதளத்தை அணுகலாம்.
- ❖ இந்த இணைய முகப்பில், விவசாயிகள் தங்கள் மாவட்டம், வட்டாரம், கிராமம், தங்களது நிலத்தின் புல எண், உட்பிரிவு எண்ணை பதிவு செய்தால், உடனடியாக, மண் வளம் குறித்த அனைத்து விபரங்களும் பதிவிறக்கம் செய்யப்பட்டு, அவர்களது கைபேசியில் மண்வள அட்டையாக மின்னணு வடிவில் கிடைக்கும்.
- ❖ இந்த இணைய முகப்பு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் மண்டல வாரியாகவும் மாவட்டத்தில் உள்ள வட்டாரம் மற்றும் கிராமங்கள் வாரியாகவும் மண்ணின் வகைகள் தரப்பட்டுள்ளன.

## சைபர் குற்றவாளிகளைக் கண்டறிய 'சைபர் அலர்ட் செயலி' அறிமுகம்

- ❖ சென்னை பெருநகர காவல் ஆணையாளர் **சைபர் அலர்ட் செயலி** என்னும் புதிய செல்போன் செயலியை துவக்கி வைத்தார்.
- ❖ தொழில்நுட்பம் வளர்ந்து உலகமே ஒரு கிராமமாக மாறிவிட்ட சூழ்நிலையில் இணையதளத்தின் பயன்பாடு இன்று அசுர ஊர்ச்சி அடைந்திருக்கிறது. அதன் தொடர்ச்சியாக இணைய வெளி குற்றுக்களும் பெருகி வருகின்றன.




- சைபர் குற்றங்களை எங்கிருந்தும் நிகழ்ந்த இயலும் என்பதால் சைபர் குற்றவாளிகள் நாடு, மொழி கடத்து உலகெங்கும் பரவியுள்ளனர். அதேபோல் பாதிக்கப்படும் மக்களும் பல்வேறு நாடுகளை நகரங்களை சேர்ந்தவர்கள். சைபர் குற்றவாளிகள் பொதுமக்களை ஏமாற்ற பல்வேறு புதிய யுத்திகளை கையாண்டு வருகின்றனர்.

- அதேபோல் புதிய தொழில்நுட்பங்கள் சாதாரண பொது மக்களின் உபயோகத்திற்கு வருவதற்கு முன்னரே, அதனை கையாண்டு பயன்டுத்தி மக்களை ஏமாற்றுவதிலும் சைபர் குற்றவாளிகள் கைதேர்ந்தவர்கள். முதலில் வங்கி கணக்குகளை தங்கள் லாபத்திற்கு உபயோகித்து வந்தவர்கள், தற்போது பண பரிவர்த்தன வாவட்டுகள் தொடங்கி, கிரிப்டோ வாட்டுகளை பயண்படுத்தி ஏமாற்றி வருகின்றனர்.

- குற்றம் புரிவதற்கு எண்ணற்ற மொபைல் எண்கள், விர்ட்யுவல் எண்கள், வாட்சாப், டெலிகிராம் போன்ற செயலிகள், தற்காலிக வெப்சைட்டுகள் பல்வேறு வங்கி கணக்குகள் போன்றவற்றை உபயோகிக்கின்றனர். தற்போது பார்ட் டைம் ஜாப் ஆஃபர். ஆன்லைன் கிரிப்போ இன்வெஸ்ட்மெண்ட் மோசடி போன்ற வழக்குகள் பதினாகின்றன.

- இக்குற்றங்கள் ஒருங்கமைக்கப்பட்ட குறிப்பிட்ட குழுவினரால் திகழ்த்தப் பெறுகின்றன. மேலும் சைபர் குற்றங்கள் தொடர்பான வழக்குகள் அனைத்து காவல் நிலையங்களிலும் பதியப்படுகின்றன, இந்நிலையில் குற்றங்களை வகைப்படுத்தி, குற்றவாளிகளின் தகவல்களோடு தொடர்பு படுத்துவதன் மூலம் குற்றவாளிகளை எளிதில் கண்டறிவதும், கைது செய்வதும் இயலும் என்பதன் அடிப்படையில் சென்னை பெருகர் காவல் ஆணையாளர் உத்தரவுப்படி சென்னை பெருநகா காவல், மத்திய குற்றப்பிரிவு சைபர் கிரைம் செல், "**சைபர் அலர்ட் செயலி** என்ற செல்போன் செயலியை வடிவமைத்துள்ளது.

## ஆம்புலன்ஸ் வரும்போது சிக்னலில் எச்சரிக்கை செய்யும் புதியதொழில்நுட்பம் இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- அவசர மருத்துவ உதவி தேவைப்படுவோர் மற்றும் சாலை விபத்தில் சிக்கி காயம் அடைந்தவர்களை உரிய நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உடனடி சிகிச்சைஅளித்தால் அவர்கள் உயிர் பிழைக்க அதிக வாய்ப்பு உள்ளது.
- அதேநேரம், நெரிசல் மிகுந்த சென்னையில் வாகனங்களுக்கு இடையேஆம்புலன்ஸ் புகுந்து செல்வதில் பல்வேறு இடையூறுகள் உள்ளன.
- இதைப் போக்கும் வகையில் சென்னை போக்குவரத்து போலீஸார், 3 தனியார் மருத்துவமனைகளுடன் இணைந்து 'எம்சைரன் ஸ்மார்ட் ஆம்புலன்ஸ்' என்ற புதிய திட்டத்தை சென்னையில் அறிமுகம் செய்துள்ளனர்.

- அதன்படி, ஆம்புலன்ஸ் வாகனத்தில் உள்ள சைரன்களில் ஸ்மார்ட் சைரன் என்ற மென்பொருள் பொருத்தப்படும். இது பொருத்தப்பட்ட ஆம்புலன்ஸ் சாலையில் வரும்போது, 200 மீட்டர் தூரத்துக்கு முன்பே சிக்னலில் உள்ளபெரிய திரையில் ஆம்புலன்ஸ் வருவதைக் காண்பிடிக்கும்.
- மேலும், வாகன ஓட்டிகள் வழிவிடும்படி எச்சரிக்கை ஒலியும் எழுப்பும். இதைப் புரிந்துகொண்டு களப்பணியிலிருக்கும் போக்குவரத்து போலீஸாரும், வாகன ஓட்டிகளும் எளிதில் ஆம்புலன்ஸ் விரைந்து செல்ல வழிவகை செய்வார்கள்.

## மாநில செய்திகள்

### இந்தியாவின் முதல் ஹைட்ரஜனில் இயங்கும் ரயில் ஹரியானாவின் ஜிந்த் மாவட்டத்தில் இருந்து இயக்கப்படுகிறது



நிலையான போக்குவரத்தைத் தழுவுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியாக, இந்தியா தனது முதல் ஹைட்ரஜனில் இயங்கும் ரயிலைத் தொடங்க தயாராக உள்ளது.

**ஜிந்த் முதல் சோனிபட் வரை: தொடக்கப் பாதை**

- இந்தியாவில் முதல் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் ரயில் ஜிந்த்–சோனிபட் வழித்தடத்தில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- பாரம்பரிய டீசல் இன்ஜின்களுடன் ஒப்பிடும்போது ஹைட்ரஜன் ரயில்கள் ஏராளமான சுற்றுச்சூழல் நன்மைகளை வழங்குகின்றன.
- ஹைட்ரஜன் ரயில்கள் – நைட்ரஜன் ஆக்சைடுகள், கார்பன் டை ஆக்சைடு அல்லது துகள்கள் போன்ற தீங்கு விளைவிக்கும் மாசுபடுத்திகளை வெளியிடுவதில்லை.

### உத்தரபிரதேச காவல் துறை 'ஆபரேஷன் கன்விக்ஷன்' தொடங்கியுள்ளது.




- இந்த நடவடிக்கையின் முக்கிய நோக்கம், பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணையை விரைவுபடுத்துவதாகும்.
- குற்றவாளிகளுக்கு எதிரான வலுவான ஆதாரங்களை சேகரிப்பது, தரமான விசாரணை மற்றும் நீதிமன்றங்களில் வழக்குகளை திறம்பட பிரதிநிதித்துவப்படுத்துவது ஆகியவற்றை இது உறுதி செய்யும்.
- குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட மூன்று நாட்களுக்குள் குற்றவாளிகள் மீதான குற்றச்சாட்டுகள் உருவாக்கப்பட்டு 30 நாட்களுக்குள் விசாரணை முடிக்கப்படும்.

- மாவட்ட காவல்துறை தலைவர்கள் மாவட்ட நீதிபதிகளுடன் ஒருங்கிணைத்து இந்த வழக்குகளை தினசரி அடிப்படையில் விசாரிக்க வேண்டும்.
- வாரந்தோறும் வழக்குகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஒரு இணையதள போர்டல் உருவாக்கப்படும்.

## தேசிய செய்திகள்

### வர்சோவா–பாந்த்ரா கடல் பாலத்துக்கு சாவர்க்கர் பெயர் மகாராஷ்டிர அமைச்சரவை ஒப்புதல்



- மகாராஷ்டிரத்தில் வர்சோவா–பாந்த்ரா கடல் பாலத்துக்கு ஹிந்துத்துவ சித்தாந்தவாதி சாவர்க் கரின் பெயரை சூட்ட அந்த மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. மகாராஷ்டிரத்தில் பாந்த்ரா பகுதிகளை இணைக்கும் வகையில், 17 கி.மீ. நீள கடல் பாலம் கட்டப்பட்டு வருகிறது.
- இதேபோல மும்பை மற்றும் நவி மும்பையை இணைக்கும் வகையில், 21.8 கி.மீ. நீள மும்பை ட்ரான்ஸ் துறைமுக பாலம் கட்டப்பட்டு வருகிறது.
- இந்நிலையில், மகாராஷ்டிர அமைச்சரவைக் கூட்டம் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தலைமையில் நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தில் பாந்த்ரா கடல் பாலத்துக்கு ஹிந்துத்துவ சித்தாந்தவாதி சாவர்க்கரின் பெயரையும், மும்பை ட்ரான்ஸ் துறைமுக பாலத்துக்கு முன்னாள் பிரதமர் வாஜ் பாய் பெயரையும் சூட்ட முடிவு செய்யப்பட்டது.